முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1606

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.02.2024**, புதன்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
   கலியுகத்தைக் காக்க வந்த தேசிகனே
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவக் குடில் படைத்து அருளுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 09 ம் நாள், 21.02.2024, புதன்கிழமை)
   வரமென அரங்கன் திருவடி பற்றி
   வையகத்தார் வணங்கி என் வழிபாட்டை
3. வழிபாட்டை உலகமெல்லாம் செய்தால் போதும்
   வையகத்துக்கு ஞான யுகமாற்றம்
   மாற்றம் தானாக ஆறுமுகன் யான்
   மண்ணுலகில் நடத்தி அற்புதம் புரிவேன்
4. வகைபட அரங்கனே
   கலியின் சிறந்த ஞானி
   வல்லமைமிக்க அரங்கன் மார்க்கமே
   வையகத்தை காக்கும் உயர்ந்த மார்க்கம்
5. மார்க்கம் வழி உலகோர் அற்புதம் பெற வேண்டி
   மாற்றம் ஆறுமுகன் விரும்புகின்ற
   ஞான உலகமாக ஞான யுகமாக ஞானச்சித்தர் காலமாக
   ஞான ஆட்சியுமாக இந்த கலியுகம் கண்டு
6. நாட்டிடுவேன் உலகில் அரங்கனால் அற்புதம்
   ஐயன் முருகன் என் கருணையோடு நடந்தேறும்
   நடந்தேற ஓங்காரக்குடில் நோக்கி
   ஞாலமதில் ஞானம் பயில

7. உலகோர் வர வேண்டும்
இடரின்றி உலகமெல்லாம் மாற்றம்
என்னருளால் இனிதே நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—